**செப்டம்பர் - 5**

**"நேச வைராக்கியம் (பொறாமை) பாதாளத்தைப் போல கொடிதாயிருக்கிறது. அதின் தழல் அக்கினித்தழலிலும், அதின் ஜுவாலை கடும் ஜுவாலையுமாயிருக்கிறது." - உன் 8 : 6.**

ஒவ்வொரு கிறிஸ்தவர்களையும் தாக்குகின்ற பெரிய பகைவர்களில் பொறாமை ஒன்றாகும். அதைத் தேவனுடைய மனிதனுடைய எல்லா நல்ல தத்துவத்தினுடைய ஒரு விரோதியாகப் பாவித்து, பார்த்த மாத்திரத்திலே கொன்று போட வேண்டும். அது ஒரு நொடிப்பொழுதாகிலும், இருதயத்தில் தங்கி இருதயத்தை அசுசியாக்கியிருந்தால் அந்த அளவுக்கு பரிசுத்தத்தின் ஆவியின் சுத்திகரிப்புக்காகவும், அன்பின் சுத்திகரிப்புக்காகவும்வேண்டிக்கொள்ள வேண்டும். பொறாமை தானே ஒரு கொடூரமான துன்பமூட்டும் ஐந்து மட்டுமல்லாமல், அதனுடைய விஷப்பற்கள் அநேகமாக நிச்சயமாக மற்றவர்களுக்கு வருத்தத்தையும், உபத்திரவத்தையும் கொடுக்கக் கூடியதாகவும், பொதுவாக துக்கத்தைக் கொண்டுவருகிறதாயும், முடிவில் அதற்கு இடங்கொடுக்கிறவர்களுக்கு அழிவை உண்டுபண்ணக் கூடியதுமாயிருக்கிறது. பொறாமை எண்ணத்தில் பாவமாயும், எண்ணத்தில் பொல்லாப்பாயும் இருந்து பாவச்செயலுக்கும், பொல்லாப்பான செயலுக்கும் விரைவாக அழைத்துச்செல்ல மிகவும் தகுந்ததாயிருக்கிறது. மனது ஒரு முறை பொறாமைக்குத் திருப்பப்பட்டால், அதை எப்பொழுதாவது முற்றிலுமாக மிகவும் கஷ்டத்துடன்தான் அதிலிருந்து சுத்திகரிக்க முடியும். ஏனென்றால், அது தன் சுற்றுப்புறத்திலுள்ள எல்லாவற்றையும், மிக வேகமாகத் தன்னுடைய சொந்த நிறத்துக்கும் குணத்துக்கும் கொண்டு வருகிறது. **- Z ’03, 330 (R 3231)**

பாதாளம் (ஷியோல் என்கிற எபிரேயபதம்) மரித்துப்போன நிலையைக் குறிக்கிறது. தனக்கு இலக்கானவர்களை இரக்கமற்ற விதமாக அது அழித்து விடுகிறது என்ற அர்த்தத்தில் அது கொடிதாயிருக்கிறது. அதனால் பச்சாதாபமின்றி யார் அவர்களை நேசிக்கின்றார்களோ, அவர்களை வருத்துகிறது. மனுஷர் மேல் வெற்றி அடைந்து கொண்டிருக்கிற அது, மனுக்குலத்தின் ஒரு விரோதி, அழிவைத்தவிர அதனால் மோகஞ்செய்யப்பட்டவர்களுக்கு அதன் பிடியிலிருந்து விடுதலை கிடையாது. பொறாமை ஷியோலைப் போன்றது. யாருக்கு விரோதமாக அது செயல்படுகிறதோ அவர்களுடைய சந்தோஷத்தை அழித்துவிடுகிறது. அடிக்கடி அது அவர்களையே அழித்துவிடுகிறது. நமது இருதயங்களில் இந்தக் குணத்தை வைத்திருந்தோமானால், மற்றவர்களுக்கு அநீதி செய்துகொண்டிருக்கிறோம் என்றும் நமக்கே தீங்கிழைத்துக் கொண்டிருக்கிறோம் என்றும் நாம் நிச்சயம் பண்ணலாம். அத்தீமையை அழிக்கும்வரை அதற்கு விரோதமாக நாம் இரக்கமற்ற ஒரு யுத்தத்தை நடத்த வேண்டும். அல்லது விடுதலை எட்டாவகையில் அது நம்மை நிச்சயமாக அழித்து விடும். **- P ’35, 117.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**நீதி 6:34; 27:4; பிர 4:4; யாத் 20:5; 34:14; 2கொரி 11:2; தானி 6:3-5; யாக் 3:14,16; ஆதி 4:5,6,8; 37:4-11,18-28; 1சாமு 18:8-30; 2சாமு 3:24-27; லூக் 15:25-32.**

**கோபுர வாசிப்பு : Z ’11, 93 (R 4789).**

**வினாக்கள் : இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்தவார அனுபவம் என்ன? அவை எவ்வாறு சரிக்கட்டப்பட்டன? அதில் உதவியது எது? இடையூறாயிருந்தது எது? அதன் பலன்கள் யாவை?**